புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **28 ஜூலை, 2021**

## பத்திரிகை செய்தி

இந்திய நாட்டின் 75-வது சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்களை முன்னிட்டு புதுச்சேரியில் 75 ஆயிரம் மரக்கன்றுகள் நடுவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்டையில், அதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று(28-07-2021) துணைநிலை ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் தலைமைச் செயலர் திரு. அஸ்வனி குமார், கூடுதல் காவல் துறை இயக்குனர் திரு. ஆனந்த மோகன், வருவாய்த்துறைச் செயலர் திரு. அஷேக் குமார், உள்ளாட்சித்துறைச் செயலர் திரு. வல்லவன், செய்தித்துறைச் செயலர் திரு. உதயகுமார், சுகாதாரத்துறைச் செயலர் டாக்டர். அருண், துணைநிலை ஆளுநரின் செயலர் திரு. அபிஜித் விஜய் சௌதரி, ஊரக வளர்ச்சித்துறைச் செயலர் திரு. ரவிபிரகாஷ், அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் செயலர் திருமதி ஸமிதா, துணை வனக்காப்பாளர் திருமதி வஞ்சுளவள்ளி, வேளாண்துறை இயக்குநர் திரு. பாலகாந்தி, பள்ளி கல்வித்துறை இயக்குநர் திரு. ருத்ர கௌடு, செய்தித்துறை இயக்குநர் திரு. வினயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் துணைநிலை ஆளுநர் வழங்கிய ஆலோசனைகள் பின்வருமாறு.

- புதுச்சேரி முழுவதும் 75 ஆயிரம் மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பதற்காக வேளாண் செயலர் தலைமையில் 75 பொறுப்பு அதிகாரிகளை நியமிக்க வேண்டும். மரக் கன்றுகள் நடுவதற்கான இடங்கள் அல்லது பகுதிகள், மர வகைகள், எண்ணிக்கை ஆகியவற்றை திட்டமிட வேண்டும்.
- மரக் கன்றுகள் நடுவதற்கான இடங்களை தேர்ந்தெடுக்க வேண்டும். ஏரி குளம் போன்ற நீராதாரங்களை அடையாளப்படுத்த வேண்டும். சலை ஓரங்களில், கட்டிடங்களைச் சேதப்படுத்தாத மர வகைகளை அதிகம் நட வேண்டும்.
- கல்வி நிறுவனங்கள், கோயில் வளாகங்கள், தொழிற்சாலைகள், சாலையோரங்களில் மரக்கன்றுகளை நட்டு பாதுகாக்கலாம்.
- நீண்ட நாட்கள் பலன் தரக்கூடிய நிழல் மரங்கள், பழ மரங்கள், பூச்செடிகள் வகைகைளத் தேர்ந்தெடுத்து நட வேண்டும். பாரம்பரியமாக அந்தந்தப் பகுதியில் மண்வளத்திற்கேற்ப வளரக்கூடிய மரக் கன்றுகளை நடவேண்டும்.
- நகரப் பகுதியில் மரங்கள் நடுவது, புதுச்சேரியை பசுமை நகரமாக மாற்றும் ஒரு நல்ல முயற்சியாக அமையும். முதலமைச்சர், அமைச்சர்கள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் என்று அனைத்து தரப்பினரும் இணைந்து பசுமைப் புதுச்சேரியை உருவாக்க வேண்டும்.
- அரசு-சாரா நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களைத் தனியார் பங்களிப்பு திட்டத்தின் கீழ் ஈடுபடுத்தலாம்.
- சுய உதவிக் குழுக்களை மரங்கள் நட்டு வளர்க்க ஊக்கப்படுத்துவது. மரம் நடும் பணியில் அவர்களை ஈடுபடுத்தலாம்.
- மியாவாக்கி குறுங்காடுகள் உருவாக்க கவனம் செலுத்தலாம். அதற்கான இடங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.